கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
வடக்கு - கிழக்கு மாகாணம்
සමූපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව
උතුරු - නැගෙනහිර පළාත
**DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT**
**NORTH-EAST PROVINCE**

உட்துறைமுக வீதி, திருகோணமலை. / ඇතුල් වරාය පාර ත්‍රිකුණාමලය / **Inner Harbour Road, Trincomalee**


எனது இல. / මගේ අංකය / My No. NEP/CO/GEN/02

உமது இல. / ඔබේ අංකය / Your No.

சுற்றுநிருப இல. 01/2005

12.01.2005

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி
ஆணையாளர்களுக்கும்,

**சுனாமி அழிவின் பின்னரான நிவாரணப் பணிகளை
ஒருங்கிணைத்தல்**

2004 டிசம்பர் 26ந் திகதி இலங்கைத்தீவில் பேரழிவை ஏற்படுத்திய ஆழிப்பேரலைகளின் அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச சமூகம், இலங்கை அரசு ஒழுங்குபடுத்திய வகையில் நிவாரணப்பணிகளை விரைவாகவும், ஆற்றல், பயனுறுதி மிக்கதாகவும் மேற்கொள்வதற்கு முனைப்பான செயற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்நிவாரணப்பணிகளில் உணவு வழங்கலிலும், ஏனைய அத்தியாவசிய பொருள் வழங்கலிலும், கூட்டுறவு நிறுவனங்கள் முக்கியமான பங்கொன்றை வகிக்கவேண்டிய தேவை உருவாகியுள்ளது. உலகத்தின் கவனம் திரும்பியுள்ள இந்தப்பணியின் கூட்டுறவு இயக்கத்தின் மீது கடந்த காலங்களில் சுமத்தப்பட்டு வரும் ஊழலும் வினையாற்றலற்றதுமான நிறுவன செயற்பாடென்பது இச்சந்தர்ப்பத்தில் துடைத்தெறியப்படவேண்டும். இந்த சவாலை முகம் கொள்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் முழுப்பலமும் வளங்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என விரும்புகின்றேன்.

கீழ்வரும் முறையில் மாவட்டங்கள்தோறும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் ஒருங்கிணைப்புக்குழுக்கள் அமைக்கப்படுதல் வேண்டும். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரை தலைவராகக் கொண்ட இக்குழுவில் ப.நோ.கூ.சங்கங்களின் பிரதிநிதிகளில் இருவர், ஏனைய கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகளில் இருவர், அரசாங்க அதிபருடைய பிரதிநிதிகளில் ஒருவர், சமூகசேவை திணைக்கத்தின் பிரதிநிதிகளில் ஒருவர் என ஏழு பேரைக்கொண்ட மாவட்டக்குழு பொறுப்பாக இருத்தல் வேண்டும். இக்குழு அரசாங்க அதிபரின் நெறிப்படுத்தலின் கீழும் ஒருங்கிணைப்பின் கீழும் செயலாற்றுவதை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் உறுதிசெய்தல் வேண்டும்.

நிவாரணப்பட்டியல்கள், நிவாரணம் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிய நேரத்தில் கிடைத்தல், நிவாரண வழங்கீட்டுக்கான உணவுக் கையிருப்பு போதியளவில் களஞ்சியத்தில் இருத்தல், உணவுப்பொருட்களின் தரம், அளவு, நிறை என்பன எவ்வகையிலும் பாதிக்கப்படாத வகையில் வழங்கீடு செய்தல். உரிய பட்டியல்களையும் கணக்கீடுகளையும் மீளளிப்புக்கு சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்களுக்கு ஒப்படைத்தல் ஆகிய முக்கிய நடவடிக்கைகள் இக்குழுவினது தொடர்ச்சியான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். இச்செயற்பாடு இருவாரத்திற்கு ஒருதடவை அறிக்கை செய்யப்பட்டு அரசாங்க அதிபருக்கு


... / Gen.Office : 026-2222189.
... / CCD&RCS (NEP): 026-2221019
... / Societies Section : 026-2222749
தொலை நகரி / ෆැක්ස් / Fax : 026-2220856.
உ. ஆணையாளர் / ස. කොමසාරිස් / Asst.Commissioner: 026-2220857
மின்னஞ்சல் / ඊ - මේල් / E-Mail : ccdnep@sltnet.lk

சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதன் பிரதியொன்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படலும் வேண்டும். குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பின் அவற்றின் மேல் தொடர் நடவடிக்கைகளையும், அதற்குப் பொறுப்பாக இருந்த அலுவலர் அல்லது பணியாளருக்கு எதிரான பொருத்தமான நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும்.

அரசாங்க அதிபரால் நிவாரணம் வழங்குவதற்கென தெரிவுசெய்யப்பட்டுள்ள விற்பனை நிலையங்களில் பயனாளிகளுக்கு சரியான அளவிலும், தரத்திலும், நிறையிலும் உரிய வேளையிலும் வாசிக்கத்தக்கவிதத்தில் சிட்டையிடப்பட்டு விற்பனைச்சிட்டையும் வழங்கப்படுதல் வேண்டும். பயனாளியின் பெயரும் உத்தரவுப்பத்திர இலக்கமும், கையொப்பமும் பெறப்படுதல் வேண்டும். முறைப்பாட்டுப் புத்தகம் ஒன்று எல்லா வேளைகளிலும் இவ்விற்பனை நிலையத்தில் பதிவுசெய்யப்படுவதற்காக வைக்கப்படுதல் வேண்டும். ஏதேனும் முறைப்பாடுகள் கிடைக்குமிடத்து அம்முறைப்பாட்டை குறித்த விற்பனை நிலையத்தில் தலைமை அலுவலகத்திற்கும் பிரதியொன்று கூட்டுறவு உதவி ஆணையாளருக்கும் பதிவு செய்யப்பட்ட 3 நாட்களுக்குள் கிடைக்கச் செய்தல் வேண்டும். இத்தகைய முறைப்பாடுகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைபற்றி முறைப்பாட்டாளருக்கும் செயற்குழுவிற்கும் ஒருவாரத்திற்குள் அறிக்கை செய்யப்படல் வேண்டும்.

நிவாரணப்பணிகள் நடைபெறும் ப.நோ.கூ.சங்க மட்டங்களில் விற்பனை நிலையங்களை மையமாகக்கொண்டு கிளைக்குழு உறுப்பினர் இருவர், நிவாரணப்பயனாளிகளில் இருவர், பொதுஅமைப்புகளின் பிரதிநிதி ஒருவர் உள்ளடங்கலாக ஐவரைக்கொண்ட மேற்பார்வைக்குழு இயங்குதல் வேண்டும். நிவாரணம் வழங்கீடு தொடர்பான பரிசோதனைகளை இக்குழு இடையறாது மேற்கொள்ளுதல் வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் நிவாரண வழங்கீட்டை திடீர் பரிசீலனை செய்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரிப்பயிலுனர்கள் உள்ளடங்கிய சிறு சிறு குழுக்களை அடிக்கடி திடீர் பரிசீலனைக்கு பிரதேச மட்டங்களில் சுழற்சிமுறையில் மேற்கொள்ளல் வேண்டும். இக்குழுக்களினால் கண்டுபிடிக்கப்படும் குறைபாடுகள் மீது உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இக்குழுக்கள் சரிவர இயங்குவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் நெருக்கமாக கண்காணித்தல் வேண்டும். பட்டதாரிப் பயிலுனர்களின் பயிற்சித்திட்டத்தில் இந்நடவடிக்கை ஒரு அங்கமாக செயல்படல் வேண்டும். அவர்கள் வதியும் இடங்களிலும் அதற்கு அண்மித்த பகுதிகளிலும் இந்நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படலாம். இந்நடவடிக்கைக்காக விசேட கொடுப்பனவுகள் அல்லது பிரயாணப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

யாழ் மாவட்டம் மூன்று உதவி ஆணையாளர் மட்டத்தில் பொருத்தமான முறையில் மூன்று வலையங்களாகப் பிரிக்கப்பட்டு வலையங்களின் தேவைக்கேற்ப அலுவலர்களை ஒதுக்கீடு செய்து இச்செயற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் இவ்விரு உதவி ஆணையாளர்களுக்கு மேலதிகமாக ப.தெ.வ.அ.பிரிவின் உதவி ஆணையாளர் பிராந்தியமொன்றிற்கு பொறுப்பானவராக இருத்தல் வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் மத்தியில் இச்செயற்பாடுகள் பகிரப்படல் வேண்டும். செயற்பாடு பகிரப்பட்டிருப்பினும் ஒருங்கிணைப்பும், அரசாங்க அதிபருடனான தொடர்புகளும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் – அபிவிருத்தியினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இந்தப்பணியில் எத்தகைய காரணங்களையும் செயற்பாட்டின் ஆற்றலின்மைக்கு விளக்கமாக ஏற்றுக்கொள்ளப்படமுடியாது என்பதையும் நிவாரண வழங்கீட்டில் கூட்டுறவு நிறுவனங்கள் பற்றிய பொது அபிப்பிராயமும், குற்றச்சாட்டுக்களும்

214

(2)

எழுப்பப்படுமிடத்து சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர்களுக்கு அத்தகைய குற்றச்சாட்டுக்களை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நியாயமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியிருப்பின் அது பிறள் நடத்தையாகக் கொள்ளப்பட்டு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படும் என்பதையும் வலியுறுத்துகின்றேன். இது தொடர்பில் மேலும் ஏதேனும் விளக்கங்கள் அவசியப்படின் இவ்வலுவலகத்தின் முகாமை சட்டப்பிரிவுடன் நேரடியாக ஒத்துழைப்புகளைப் பெற முடியும் என்றும் அறியத்தருகிறேன்.

இ.இளங்கோவன்,
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்(வகி).

பிரதி:

1. செயலாளர், பொதுநிர்வாக, உள்ளூராட்சி, கூட்டுறவு அமைச்சு, வகிமா. - தகவலுக்காக.
2. செயலாளர், கூட்டுறவு அமைச்சு, கொழும்பு. - தகவலுக்காக.
3. அரசாங்க அதிபர், .................. - தகவலுக்காக.
4. பிரதேச செயலாளர், .................. - தகவலுக்காக.
5. ப.நோ.கூ.சங்கம், .................... - தகவலுக்காக.
6. மாவட்டக் கூட்டுறவுச்சபை, .................. - தகவலுக்காக.

மறு பக்கம் பார்க்கவும்.